**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி.13.02.2026**

**சி.சி.எண்.64/2024**

**அ.சா. 1 (பூரணம்) சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் தினத்தன்று காலை 8 மணிக்கு கிழக்கிலிருந்து வந்து என் வீட்டு முன்பாக நான் வந்ததாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். எதிரி கோமதி எனது தலைமுடியை பிடித்து இழுத்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் விசாரணையில் எனது 3 பற்களிலிருந்து ரத்தம் வந்ததாக கூறினேனா என்றால் 3 பற்கள் உடைந்து ரத்தம் வந்ததாக கூறினேன். எதிரி சுப்பிரமணியன் எனது மகனின் கழுத்தை பிடித்து நெறித்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரி சுப்பிரமணியன் எனது மேல்தாடையில் மிதித்தார் என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரி சுப்பிரமணியன் எனது மேல்தாடையில் மிதித்ததால் எனக்கு பற்கள் உடைந்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரிகள் மூவரும் எனது கணவரை அசிங்கமாக பேசியதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். 3 எதிரிகளும் சேர்ந்து எனது மகனை அடித்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரி கோமதி எனது மகள் கோமதியம்மாளை மிதித்து கீழே தள்ளியதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். எதிரிகள் மூவரும் உன்னால் என்ன செய்யமுடியும் செய்துபார் என்று என்னிடம் கூறியதாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் விசாரணையில் எனது கணவரும், மகனும் சேர்ந்து என்னை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றதாக கூறினேனா என்றால் கூறினேன். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களை மருத்துவரிடம் கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் என்னை எப்போது வந்து விசாரித்தார்கள் என்றால் மாலை 4 மணியளவில் விசாரித்தார்கள். எனது மகனும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்று புகார் மனுகொடுத்தோமா என்றால் சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுக்க காவல்நிலையம் சென்றோம். போலீசார் எங்களை மருத்துவனைக்கு போவதாக சொன்னார். நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். என்னிடம் இருந்து சம்பவம் தொடர்பாக புகாரினை காவல்நிலையத்தில்

வைத்து போலீசார் எழுதிக்கொண்டார்களா என்றால் இல்லை. நாங்கள் முதலில் காவல்நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தோம் என்றும், அவ்வாறு புகார் மனு கொடுத்ததற்கு பிறகுதான் மருத்துவமனைக்கு சென்றோம் என்றாலும், அந்த புகார் மனு இவ்வழக்கிற்கு விரோதமாக உள்ளதால் அந்த புகார் மனு கொடுத்த விபரத்தை பற்றி தெரிவிக்காமல் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடைபெற்றபோது எனது கணவர்வீட்டிற்குள் இருநதார் என்றால் இல்லை. அவர் கிழக்கிலிருந்து வந்தார். நான் கீழே விழுந்து கிடக்கும்போது என் கணவர் வந்து பார்த்தார் என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்கும் விவசாயம் தொடர்பாக முன்பகை உண்டு என்றாலும், அதனால் எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு நான் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி.13.02.2026**

**சி.சி.எண்.64/2024**

**அ.சா. 2 (சண்முகையா) சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று காலை 7–8 மணிக்கு என் வீட்டு முன்பு எதிரிகள் மூவரும் என் மனைவியை அடித்து அவரது பல்லை உடைத்தார்கள் என்று கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் விசாரணையில் எதிரிகள் எனது மனைவியின் தாடையை பிராண்டிவிட்டார்கள் என்று கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் விசாரணையில் எதிரி சுப்பிரமணியன் என் மகனின் சட்டையை கிழித்தார் என்று கூறினேனா என்றால் கூறினேன். எதிரி சுப்பிரமணியன் எனது மகனின் தோள்பட்டையை பிராண்டி வைத்ததாக போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்த பிறகு சின்னகோவிலான்குளம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அதன்பிறகு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கூறினேனா என்றால் கூறினேன். காவல்நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் மனைவியை எதிரிகள் அடிக்கும்போது நான் பக்கத்தில்தான் இருந்தேன். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் உண்டு என்றால் சரியல்ல. சுமார் 4 வீடுகள்தான் இருக்கும். சம்பவம் நடைபெற்றபோது 3ம் நபர்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் முன்பகை உண்டு என்றாலும், அதனால் எனது மனைவி கீழேவிழுந்தபோது ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி அவர்களுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எனது மகனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு அவரை மருத்துவமனையில் சேர்த்து அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது என்றால் சரிதான். என் மகனை மருத்துவமனையில் சேர்த்தபோது அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் கூறினோம் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், அ.சா.1 எனது மனைவி, அ.சா.3 எனதுமகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**